**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026.01

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p1-11** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# எட்டுத்தொகையில் நம்பிக்கைகள்: ஓர் ஆய்வு

## Beliefs in Ettuthogai

***முனைவர் அ. உதயவாணி,***
உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை, சேக்ரட் ஹர்ட் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, பேரணி, விழுப்புரம்.

**Dr. A. Udayavani*,**
*Assistant Professor, Postgraduate Department of Tamil,*
*Sacred Heart Arts and Science College, Perani, Villupuram*
*EMail: udhayavani424@gmail.com*

***Article history***
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email:
*udhayavani424@gmail.com*

**Abstract:** A society's beliefs serve as powerful indicators of its deep-rooted cultural traditions, reflecting collective values, social needs, and historical continuity across generations. Historically, when early human communities encountered the mysterious operations of nature or untangible existential troubles, the mind constructed imaginative explanations to mitigate fear and instill order. Over time, these conceptual frameworks solidified into enduring cultural beliefs and social customs. While many ancient Tamil beliefs may appear irrational or unscientific through a modern lens, they remain deeply interwoven into the region's historical ethos, daily practices, and social fabric. Examining these traditions reveals how early intellectual adaptations continue to shape cultural identity, offering valuable insights into the psychological and sociological evolution of Tamil civilization.

**Keywords:** *Ancient Tamil beliefs, Cultural traditions, Tamil history and heritage, Folk beliefs, Cultural anthropology.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமூகத்தின் நம்பிக்கைகள் ஆகும். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பேணிக் காக்கப்படுபவை; அவை அச்சமூகத் தேவைகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் தோன்றி, காலம்காலமாக மரபுவழியே தலைமுறை தலைமுறையாகப் பயின்று வருகின்றன. எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறும் பேய் நம்பிக்கை, நிமித்தம், விரிச்சி, ஆழியிழைத்தல், பல்லி, காக்கை, மரம், கனவுகள் ஆகிய பல்வேறு நம்பிக்கை வகைகளை இக்கட்டுரை தொகுத்து ஆராய்கிறது. இந்நம்பிக்கைகள் சங்ககால மக்களின் அச்சத்தினின்றும், இயற்கையின் புரியாத நிகழ்வுகளுக்குக் காரணம் தேடிய மனித மனத்தின் முயற்சியினின்றும் தோன்றியவை என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. மேலும், இந்நம்பிக்கைகளின் தோற்றம், வளர்ச்சி, சொல்லாய்வு ஆகியவற்றையும், அவற்றின் இன்றைய தொடர்ச்சியையும், சமூகவியல் பரிமாணத்தையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது. பழந்தமிழ் மக்களின் இந்நம்பிக்கைகள் இன்றைய அறிவியல் உலகில் அறிவுக்குப் பொருந்தாதனவாகத் தோன்றலாம்; எனினும் ஒரு நாட்டின் வரலாற்றில் இத்தகைய நம்பிக்கைகளில் பல அவர்களின் வாழ்வோடு இரண்டறப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்ற உண்மையை மறுக்க இயலாது.

**கருச்சொற்கள்**

நம்பிக்கை, நிமித்தம், விரிச்சி, சகுணம், ஆழியிழைத்தல், எட்டுத்தொகை, சங்க இலக்கியம், நாட்டுப்புற வழக்காறு.

## 1. முன்னுரை

சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமூகத்தின் நம்பிக்கைகள் ஆகும். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பேணிக் காக்கப்படுபவை. அச்சமூகத் தேவைகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் தோன்றியன. அவை காலம்காலமாகத் தொடர்ந்து மரபுவழியே தலைமுறை தலைமுறையாக பயின்று வருகிறது. நம்பிக்கைகள் மனிதனின் அச்சம் காரணமாகவே தோன்றுகின்றன. இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத போதும், மனித வாழ்வில் நிகழும் சில ஊறுகளுக்கு காரணம் தெரியாத போதும் மனித மனம் சிலவற்றைப் படைத்து காரணத்தை கற்பித்துக் கொள்கிறது. அவை நம்பிக்கைகளாக உருபெறுகிறது. இன்றைய அறிவியல் உலகில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் அறிவுக்குப் பொருந்தாதனவாகத் தோன்றலாம். எனினும் ஒரு நாட்டின் வரலாற்றில் இத்தகைய

நம்பிக்கைகளில் பல அவர்களின் வாழ்வோடு இரண்டறப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்ற உண்மையை மறுக்க இயலாது என்பதை நோக்கமாகக் கொண்டே இக்கட்டுரை அமைகின்றது.

## 2. ஆய்வு நோக்கமும் முறையியலும்

எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகியவற்றில் இடம்பெறும் நம்பிக்கை சார்ந்த பாடல் வரிகளைத் தொகுத்து, அவற்றை வகைப்படுத்தி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மூலப்பாடல்களும் அவற்றிற்கான உரைகளும் முதன்மை மூலங்களாகக் கொள்ளப்பட்டு, நாட்டுப்புற இயலாய்வு, சமூக மானிடவியல் சார்ந்த இரண்டாம்நிலை ஆய்வுக் கட்டுரைகளும் இணையவழி வெளியிடப்பட்ட திறந்தநிலை ஆய்விதழ்களும் துணை மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டு, சொல்லாய்வு (etymological analysis) மற்றும் பொருண்மையியல் அணுகுமுறை (thematic approach) வழி இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## 3. தோற்றமும் வளர்ச்சியும்

மனித மனத்தின் விழைவால் நம்பிக்கைகள் தோன்றுகின்றன. மனித செயலில் வெற்றி கிடைத்தால் நன்மையாகவும், தோல்வி ஏற்பட்டால் தீமையாகவும் கருதி நிமித்தங்களையும் நிமித்தக் கூறுகளையும் கற்பித்து நம்பிக்கைகள் உருவாக்கிக் கொள்கின்றன. இந்நம்பிக்கைகள் மக்களிடையே இயற்கையாகவும் செவிவழியாகவும் பரவும் பொழுது மனித மனம் நன்மை நிகழவேண்டும் என்ற நோக்கோடு அதனைச் சோதனைக்கு உட்படுத்தாமல் ஏற்றுக்கொள்கிறது. பின்னர் அந்நம்பிக்கைகள் சமுதாய செல்வாக்குப் பெற்று நிலைத்துவிடுகின்றன. மனிதனின் வாழ்வியல் பிறப்பு முதல் இறப்புவரை பலவித நம்பிக்கைகளை மக்கள் கைக்கொண்டிருக்கக் காண்கிறோம். நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறும் அளவிற்கு வாழ்வியலில் பெரும்பங்கு வகிக்கின்றன. ஒரு வளர்ச்சியடைந்த மனிதனிடம் பத்தாயிரக்கணக்கான நம்பிக்கைகளும் நூற்றுக்கணக்கான வழக்கங்களும் இருப்பதாகச் சமூக அறிவியல் 'கலைக்களஞ்சியம்' சுட்டுகிறது. இலக்கியத்தில் இடம்பெறும் நம்பிக்கை மற்றும் நிமித்தங்களும் மனித மனம் கிளர்ச்சிக்குள்ளாக்கப்பட்டுள்ள தடுமாற்ற நிலையிலும் நன்மை விளைய வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகவும் தோன்றியதாகவே காட்சி தருகின்றன.

## 4. சொல்லும் பொருளும்

நம்பிக்கையினைச் சுட்டும் ஆங்கிலச் சொல் (Belief) தமிழில் இச்சொல் நம்பிக்கையினைக் குறிக்கப்

பயன்பட்டுள்ளதனை சங்க இலக்கியப் பயிற்சி கொண்டு உணரலாம். தொல்காப்பியத்தில் நம்பு என்ற சொல் விருப்பம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. மேலும் நற்றிணையில் நம்பு என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளிலும் மற்றொரு பாடலில் நம்புதல் என்ற சொல்லாட்சி பயின்று வந்துள்ளது. இவற்றிலிருந்து நம்பு என்ற சொல் தொடக்கத்தில் விருப்பம் என்ற பொருளிலும், பின்னர் நம்பிக்கை என்ற பொருளிலும் பயின்று வந்துள்ளது. காலப்போக்கில் நம்பிக்கை என்ற பொருளில் மட்டுமே இச்சொல் வந்துள்ளது என்பதை நடைமுறையில் உணரமுடிகிறது.

**"நம்பு மேவு நசையாகும்மே" (தொல்.சொல். 329)**
**"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்" (நற். 175:7)**
**"நாடல் சான்றோர் நம்புதல் பழியெனிற்" (நற். 327:1)**

இப்பாடல் அடிகள் இக்கருத்தினை உணர்த்துகின்றன.

## 5. எட்டுத்தொகையில் இடம்பெறும் நம்பிக்கை வகைகள்

### 5.1 பேய் நம்பிக்கை

தமிழ் மக்களுக்கு பேய் நம்பிக்கை இருந்தது; அதனைக் கண்டு அஞ்சினர். இவை சுடுகாட்டிலும் மரங்களிலும் வாழும் என நம்பினர். பேய்க்குப் பலியிட்டால் அது தன்னால் பிடிக்கப்பட்டவரின் உயிரைக் கொல்லாது விட்டுவிடும் என்ற நம்பிக்கை இருந்தது என்பதை,

**"மெய்பணிகூரா அணங்கெனப் பராவலின்**
**வலிகொண்டு பெயரும் பாசம் போல" (பதிற். 71.22-23)**

பேய்களும் பிசாசுகளும் வருத்தும் தெய்வங்களும் மதுரை வீதிகளில் நள்ளிரவில் சுற்றித் திரிந்தன என அக்கால மக்கள் நம்பினர் (மதுரைக்காஞ்சி. 631-633) என்ற பாடலடிகளில் குறிப்பிடுகின்றது.

**"நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள் காழ்**
**விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள் குறுகி,**
**'புதல்வன் ஈன்றென'ப் பெயர் பெயர்த்து...." (நற். 370.1-5)**

என்ற அடிகளில் வேப்பிலையும் வெண்சிறு கடுகும் மக்களைப் பேயினின்றும் காக்கும் என நம்பினர். குழந்தைகளுக்குத் தீங்கு ஏற்படாமல் இருக்க தலையில் நெய்யும் வெண்கடுகும் அப்பப்பட்டன.

**DOI:** **https://doi.org/10.63300/tm12042026.01**

**"தீம் கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ,**

**வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க,**

**கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி,**

**ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி,**

**இசை மணி எறிந்த, காஞ்சி பாடி,**

**நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ**

**காக்க வம்மோ...." (புறம். பா. 281)**

புண்பட்ட கணவனைப் பேய்தீண்டிக் கொன்றுவிடாமல் இருக்க மனைவியர் இலவ மரத்தின் இலையை வேப்பிலையோடு சேர்த்துக் கட்டி வாசலில் தொங்கவிட்டு, வெண்கடுகை வீட்டில் தூவியும், யாழ் இசையில் காஞ்சிப் பண் பாடியும், நறும்புகை எடுத்தும், சிறு மணிகளை ஒலித்தும், தன் கணவனைப் பேய்களிடம் இரந்து காப்பாற்ற பெண்கள் முயன்றனர் என்ற செய்தியை (புறநானூறு. 281) பாடல் குறிப்பிடுகின்றது.

### 5.2 நிமித்தம்

நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும். இதனை இன்று 'சகுணம்' என அழைக்கின்றனர். பழங்காலத் தமிழர்கள் இதனைப் 'புள்' 'நிமித்தம்' என இரு சொற்களால் சுட்டியுள்ளனர். தொல்காப்பியத்தில் 'மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்' என்று (தொல்.பொருள். 39.1-4) குறிப்பிடுகிறது. வீட்டிலிருந்து புறப்படும் முன் நன்னிமித்தம் பார்த்து அவர்கள் புறப்பட்டனர். பறவைச் சகுணங்களாலும் நிமித்தங்கள் தீர்மானிக்கப்பட்டன.

**"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**

**உள்ளிச் சென்றோர் பழியலர்" (புறம். 204:10-11)**

வள்ளலிடம் பரிசில் கிடைக்கவில்லை என்றால் வள்ளலைப் பழிக்காமல் தாம் புறப்பட்ட நேரம் நல்ல நேரமாக இல்லை என்று வருந்தினர். பறவை செயல்கள் மூலமாகவும் நிமித்தம் பார்க்கப்பட்டது; அது புள் நிமித்தம் எனப்பட்டது. நாளினாலும் புள்ளினாலும் நிமித்தம் பார்க்கப்பட்டது.

**"வேதின வெரிநி னோதிமுது போஒத்**

**தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்" (ஓந்தி-ஓணான்)**

ஓந்தியை வைத்தும் அக்கால மக்கள் நிமித்தம் பார்த்தனர். அது புள் நிமித்தம் போலக்

கொள்ளப்பட்டது.

### 5.3 விரிச்சி

விரிச்சி என்னும் நற்சொல் கேட்டு அதன்படி நடக்கும் நம்பிக்கையும் அக்காலத்தில் இருந்தது. தம்மொடு தொடர்பு இல்லாதவர்கள் தற்செயலாகப் பேசும் பேச்சினை அடியொட்டி அமைவதே 'விரிச்சி' ஆகும்.

**"உருமிடைக் கடிஇடி கரையும்**
**பெருமலை நாடனை 'வருஉம்' என்றாளே" (நற். 65)**

என்ற பாடலடிகளில் தலைவன் எப்போதும் வருவான் என தலைவியும் தோழியும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது பக்கத்து வீட்டுப் பெண் தற்செயலாக மற்றொரு பெண்ணுக்கு 'இன்னே வருவேன்' இப்போதே வருவான் என்று உரைத்தல் அது நற்சொல்லாகக் கருதப்பட்டது (நற். 65). மேலும்,

**"நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்**
**செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா" (புறம். 28:6-7)**
**"சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றம்" (குறு. 260-3)**

இப்பாடலடிகளில் விரிச்சி கேட்பதற்காக முதுபெண்டிர் கோவிலுக்குச் சென்று முல்லை பூக்களை நெல்லோடு தெய்வத்துக்குப் பலியாகத் தூவி 'விரிச்சி' கேட்டு நிற்பர். அரிவளை — சங்கு இங்கு வளையல்களுக்கு ஆகுபெயராக வந்து வளையல்கள் அணிந்த பொலியுற்ற தோள் துடித்தலை நன்னிமித்தமாகக் கூறப்படுகிறது.

### 5.4 ஆழியிழைத்தல்

தலைவனைப் பிரிந்து தனிமையுற்றிருக்கும் தலைவி, தலைவனின் வருகையை எதிர்நோக்கித் தானே குறிப்பார்க்கும் ஒரு குறிமுறையாகும் இது.

**"கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று**
**நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே" (கலி. 142:24-25)**

இலக்கியங்கள் இதனைக் கூடலிழைத்தல் எனச் சுட்டுகின்றன. கண்ணை மூடிக்கொண்டு மணலில் ஒரு வட்டம் வரைய முற்படுதலாகும் இது. கோடுகள் இணைந்திருந்தால் தான் நினைத்தது நிறைவேறும், இணையாதிருப்பின் நிறைவேறாது என நிச்சயிக்கும் நிமித்த குறி நம்பிக்கையாகும்.

இதனைக் கூடல், கூடலிழைத்தல், ஆழியிழைத்தல் எனவும் சுட்டுவர். இலக்கியத்தில் தலைவனின் வரவினைக் கோடிட்டு 'கழிவரைந்தும்' எண்ணிய திறத்தைக் காண்கிறோம். ஆனால் 'கூடற்கழி' வரைந்த திறத்தைக் கலித்தொகையில் தான் காணப்படுகிறது.

**"செய்குறி ஆழி வைகறோ றெண்ணி**
**எழுதுசுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண்" (அகம். 351:10-11)**

இப்பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**5.5 பல்லி**

அக்கால மக்கள் பல்லி சொல்வதைக் கூர்ந்து கேட்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எண்ணிப் பார்த்து அதற்கேற்ப நடந்தனர். தலைவனைப் பற்றித் தான் நினைத்த போதெல்லாம் பல்லி சுவரில் பொருந்தி நன்றாக ஒலித்தது. இதனால் பொருள் தேடச் சென்ற தலைவன் விரைவில் திரும்புவான் என தலைவி நம்பினாள் (நற். 333.9-12). பல்லியின் ஒலி நன்னிமித்தமாக அமைவதை இனிய கூறும் பல்லி (நற். 246:1-2), நல்லதைக் கூறும் பல்லி (நற். 333:10-12), நிகழ்வதைக் கூறும் பல்லி (அகம். 151:13-15), முதுவாய்ப் பல்லி (அகம். 387:14-16), கணிவாய்ப் பல்லி (151:14-15) எனச் சுட்டுவது மூலம் அறியலாம். பல்லிபட்ட திசையினைத் தொழுத செய்தியை,

**"ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇ**
**பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்" (அகம். 9:18-19)**

இன்றைய நிலையிலும் பல்லியின் சொல்லைக் கேட்கும் வழக்கமும், அவற்றின் பலன் கண்டு செயல்களைத் தொடங்குவதும் கிராமப்புற மக்களிடையே நம்பிக்கையாக இருந்து வருகிறது.

**5.6 காக்கை**

காக்கை பறவை இனங்களிலேயே அறிவுமிக்க பறவையாகக் கருதப்படுகிறது. இதன் ஒலியினைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் சங்க காலம் தொட்டு இன்றுவரை தமிழ்மக்களிடையே நின்று நிலவுகிறது. காக்கை கரைந்தால் வீட்டிற்கு விருந்தினர் வருவர் என்னும் நம்பிக்கை அக்காலத் தமிழ் மக்களிடமும் இருந்தது என்பதை 'விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே' (குறு. 210:6) வரிகளில் கூறப்படுகிறது. உணவு உண்ணுவதன் முன்னர் உண்ணவிருக்கும் உணவில் ஒரு பகுதியைக் காக்கைக்குக் கொடுக்கும் வழக்கம் அன்று இருந்துள்ளது. காக்கைகளின் வடிவில் முன்னோர்கள் உணவை ஏற்பதாக மக்களிடம் நம்பிக்கை இருந்தது. எனவே காக்கைக்கு இடப்பட்ட உணவு 'பலி' எனப்பட்டது.

**"மாசில மரத்த பலியுண் காக்கை" (நற். 281:1)**

**"உகுபலி அருந்திய தொருவிரற் காக்கை" (நற். 343:5)**

ஆகிய அடிகள் காக்கைப் பற்றிய நம்பிக்கையை எடுத்துரைக்கிறது.

### 5.7 மரம்

மரத்தை அடிப்படையாகக் கொண்டு பல நம்பிக்கைகள் நிலவி வந்தன. மரத்தைக் கடவுள் உறையும் இடங்களாக நம்பி மக்கள் வழிபட்டனர்.

**"தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை**

**மன்றப் பெண்ணை" (நற். 303:3-4)**

**"கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்**

**சேவலொடு புணராச் சிறுகளும் பேடை" (அகம். 270:12-13)**

உன்ன மரம் என்பது ஒருவகை மரமாகும். இதனைப் போர் செய்வதற்குச் செல்வோர் நிமித்தம் பார்த்தற்குரிய மரமாகக் குறிப்பர். இம்மரம் தழைத்திருந்தால் வெற்றி கிட்டும், வாடி இருந்தால் தோல்வி வரும் என்ற நம்பிக்கை இருந்தது.

**"ஓடாக் கழல் நிலை உளப்பட ஓடா**

**உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்**

**இலையில மலர்ந்த இலவமொடு**

**நினையுயர் பிறங்கல் மலையிறந் தோரே" (அகம். 185:12-13)**

மேலும், உன்னம் நிமித்தமுணர்த்திய நிலையினைப் பதிற்றுப்பத்தின் (40.12-17, 61.3-6) இரு பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.

### 5.8 கனவுகள்

இலக்கியத்தில் கனவுகள் நம்பிக்கைகளாகவும், வருங்காரியத்தை முன்னர் உணர்த்துவனவாகவும், உற்பாதங்களின் அறிகுறியாகவும் காட்டப்பட்டுள்ளன. இலக்கியத்தில் கனவுகளில் தீமையை முன்கூட்டி உணர்த்துகின்றவைதான் மிகுதி; நற்கனவுகள் மிகக் குறைவாகவே அமைவதாகச் சுட்டப்படுகிறது.

**"எயிறுநிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்,**

**களிறுமேல் கொள்ளவும், காழகம் நீப்பவும்,**

**வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்,**

**கனவின் அரியன காணா, நனவின்...." (புறம். 41:8-11)**

என்ற அடிகளில் எயிறு நிலத்தில் வீழ்தல், தலையில் எண்ணெய் தேய்த்திருத்தல், களிறுமேல் ஊர்தல், கட்டிய ஆடை நீங்கல், படைகலம் கவிழ்தல் ஆகியவை கனவில் வருவதைத் தீய நம்பிக்கையாகக் குறிக்கப்படுகிறது.

### 6. நாட்டுப்புற நம்பிக்கைகளின் தொடர்ச்சி: இன்றும் நிலவும் மரபுகள்

சங்க காலத்தில் தோன்றிய பல நம்பிக்கைகள், வடிவம் சிறிது மாறினாலும், இன்றும் தமிழ்ச் சமூகத்தில், குறிப்பாக கிராமப்புறங்களில் தொடர்ந்து நிலவி வருகின்றன. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவார்கள் என்ற நம்பிக்கையும், பல்லி கத்தினால் செய்தி வரும் என்ற நம்பிக்கையும் சங்க காலத்திலிருந்து இன்றுவரை மாறாமல் தொடர்கின்றன. இடது கண் துடித்தால் நன்மை ஏற்படும் என்றும், வலது கண் துடித்தால் தீமை நேரிடும் என்றும் கருதும் 'கண் துடிப்பு' நம்பிக்கை, விரிச்சி மற்றும் ஆழியிழைத்தல் நம்பிக்கைகளின் தொடர்ச்சியாகவே கருதத்தக்கது. மேலும் தீய கண் பாதிப்பிலிருந்து காக்கக் காப்புக் கயிறு கட்டுதலும், நறுமணப் புகையில் தலைமுடியை உலர்த்துதலும் இன்றளவும் தொடரும் மரபுகளாகும். இத்தகைய தொடர்ச்சி, நம்பிக்கைகள் என்பவை காலத்தால் மாறாத, தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் பண்பாட்டு நினைவகமாக (cultural memory) செயல்படுகின்றன என்பதை உணர்த்துகிறது.

### 7. நம்பிக்கைகளின் சமூகவியல் பரிமாணம்

நம்பிக்கைகள் என்பவை வெறும் மூடநம்பிக்கைகளாக மட்டும் கருதப்படாமல், அச்சமூகத்தின் உளவியல் தேவைகளையும், நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளும் மனித மனத்தின் தகவமைப்புத் திறனையும் (adaptive mechanism) பிரதிபலிப்பவையாகவும் நோக்க வேண்டும் என்பது சமூக மானிடவியல் அறிஞர்களின் கருத்தாகும். வெற்றி தோல்வியை, பிறப்பு இறப்பை, பிரிவு சேர்க்கையை — இவ்வாறு கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வாழ்க்கை நிகழ்வுகளை எதிர்கொள்ளும் பொழுது, மனித மனம் அவற்றிற்கு அர்த்தமும் ஒழுங்கும் அளிக்கும் முயற்சியிலேயே நிமித்தமும் விரிச்சியும் கனவுப் பொருள் கூறலும் தோன்றியிருக்க வேண்டும். எட்டுத்தொகையில் இடம்பெறும் நம்பிக்கைகள் பெரும்பாலும் தலைவன்-தலைவியர் பிரிவு, போருக்குச் செல்லும் மறவர், பிள்ளைப் பேறு ஆகிய உணர்ச்சிகரமான சூழல்களில் தோன்றுவது கவனிக்கத்தக்கது; இது நம்பிக்கைகள் மனித மனதின் கவலை மற்றும் நம்பிக்கை ஆகிய இரு முனை

உணர்வுகளுக்கும் இடையேயான பாலமாக அமைந்திருந்தன என்பதை உணர்த்துகிறது.

## 8. முடிவுரை

மேற்கூறிய நம்பிக்கைகள் தமிழ் மக்களின் மனத்தின்கண் தோன்றியவையாகவே இலக்கியங்கள் காட்டுகின்றன. இன்றைய விஞ்ஞானக் காலத்திலும் தமிழர்கள் தம் முன்னோர் பின்பற்றிய நம்பிக்கைகளை மரபுவழியாகக் கடைப்பிடித்து வருவதைக் காணமுடிகிறது. இது அவர்களின் வாழ்வில் ஓர் அங்கமாக மாறிவிட்டது என்பதே நிதர்சனமான உண்மை என்று இக்கட்டுரை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. பேய், நிமித்தம், விரிச்சி, ஆழியிழைத்தல், பல்லி, காக்கை, மரம், கனவுகள் ஆகிய பல்வேறு நம்பிக்கை வடிவங்கள் வழியே, சங்ககால தமிழ் மக்களின் அச்சம், நம்பிக்கை, ஆறுதல் தேடும் மனநிலை ஆகியவற்றை எட்டுத்தொகை நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன. இவை காலத்தால் மாறினும், இன்றும் ஏதேனும் ஒரு வடிவில் தமிழ்ச் சமூகத்தில் தொடர்வது, நம்பிக்கை என்பது ஒரு உயிரோட்டமுள்ள பண்பாட்டு நிகழ்வு என்பதை மெய்ப்பிக்கிறது.

Tamilmanam

### துணைநூற் பட்டியல் (Works Cited — MLA 9வது பதிப்பு)

[1]. இளம்பூரணர். தொல்காப்பியம் — சொல்லதிகாரம், பொருளதிகார மூலமும் உரையும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1985.

[2]. காந்தி, க. தமிழ் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும். உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990.

[3]. பாண்டுரங்கன், அ. சங்க இலக்கியம் — சமயம், வழிபாடு, அரசு, சமூகம். (பதிப்பாளர் விவரம் இணைக்கப்படவில்லை).

[4]. புலியூர்க் கேசிகன். புறநானூறு — மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை - 600 014, 1999.

[5]. புலியூர்க் கேசிகன். நற்றிணை — இரண்டாம் பகுதி, தெளிவுரை. பாரி நிலையம், 184 பிராட்வே, சென்னை - 600 001, 1997.

[6]. சக்திவேல், சு. நாட்டுப்புற இயல் ஆய்வு. (பதிப்பாளர் விவரம் இணைக்கப்படவில்லை).

[7]. "சங்க இலக்கியம் — அறிமுகம்." Learn Sangam Tamil, 20 Jan. 2025, learnsangamtamil.com/சங்க-இலக்கியம்-அறிமுகம்/. அணுகப்பட்ட நாள் 22 ஆகஸ்ட் 2026.

[8]. "சங்க இலக்கியம்." விக்கிப்பீடியா — தமிழ்ப் பதிப்பு, விக்கிமீடியா அறக்கட்டளை, 2026, ta.wikipedia.org/wiki/சங்க_இலக்கியம். அணுகப்பட்ட நாள் 22 ஆகஸ்ட் 2026.

[9]. "சங்க இலக்கியம் — ஓர் எளிய அறிமுகம்." கீற்று (Keetru), 29 Jan. 2010, www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/2826-2010-01-29-08-13-35. அணுகப்பட்ட நாள் 22 ஆகஸ்ட் 2026.

#### ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

tamilmanam